செ.வெ.எண். 72/ஆகஸ்ட் தேதி : 28.08.2016

**பத்திரிக்கை செய்தி**

# தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதிகளின் நேர்முக உதவியாளர் பணிக்கான தேர்வு நடைபெறுவதை தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் உறுப்பினர் திரு.வி.சுப்பையா அவர்கள் தேர்வு மையங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு





தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதிகளின் நேர்முக உதவியாளர் மற்றும் உயர் நீதிமன்ற பணிகளுக்கான தேர்வு தருமபுரி மாவட்டத்தில் 27.8.2016 முற்பகல் மற்றும் 28.8.2016 அன்று முற்பகல் மற்றும் பிற்பகல் ஆகிய இருவேளை நடைபெற்றது.

தேர்வு மையங்களில் தேர்வுக்கான அனைத்து ஏற்பாடுகளும் முழு அளவில் செய்யப்பட்டது. தருமபுரி மையத்தில் அவ்வையார் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, அதியமான் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் பச்சமுத்து மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி ஆகிய 3 தேர்வு மையங்களில் தேர்வு நடைபெற்றது. 27.8.2016 அன்று முற்பகல் நடைபெற்ற தேர்வில் 5 தேர்வர்களுக்கு தேர்வெழுத ஏற்பாடு செய்யப்பட்டதில் 4 தேர்வர்கள் கலந்து கொண்டு தேர்வெழுதினர் ஒருவர் தேர்வுக்கு வரவில்லை. மேலும் 28.8.2016 முற்பகல் நடைபெற்ற தேர்வுக்கு 1365 தேர்வர்கள் தேர்வெழுத ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததில் 1052 தேர்வர்கள் கலந்து கொண்டனர் 313 தேர்வர்கள் தேர்வுக்கு வரவில்லை. 28.8.2016 அன்று பிற்பகல் நடைபெற்ற தேர்வுக்கு 73 தேர்வர்களும் தேர்வெழுத ஏற்பாடுகள் செய்யப்பட்டதில் 58 தேர்வர்கள் கலந்து கொண்டனர் 15 பேர் தேர்வெழுதவரவில்லை. மூன்று தேர்வுகளிலும் 1147 தேர்வர்கள் தேர்வில் பங்கேற்றனர்.

தேர்வு எழுதவரும் விண்ணப்பதாரர்கள் தேர்வு மையத்தில் **கைபேசி, கால்குலேட்டர் மற்றும் எலக்ட்ரானிக் கைகடிகாரம் (Digital watch)** போன்ற தகவல் பரிமாற்ற உபகரணங்கள் பயன்படுத்த அனுமதிக்கப்படவில்லை. அணைத்து இடங்களிலும் தேர்வு நடவடிக்கைகள் வீடியோ கேமரா மூலம் பதிவு செய்யப்பட்டது. முறைகேடுகள் இல்லாமல் தேர்வு நடைபெறுவதை கண்காணிக்கப்பட்டது.

இந்த ஆய்வில் மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி திருமதி.எஸ்.சுபாதேவி,மாவட்ட ஆட்சியர் திரு. கே. விவேகானந்தன், இ. ஆ.ப., மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ.சங்கர், தருமபுரி கோட்டாட்சியர் திரு. இராமமூர்த்தி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.